**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No. 254/2025</u>**

**<u>நாள் : 07.07.2026</u>**

**எ.ம.சா.** 2 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி.சுவேதா | மாவட்டம் | : | சென்னை |
| தந்தை / பெயர் | : | திரு. குமரேசன் | வயது | : | 23 |
| ஊர் | : | சென்னை | தொழில் | : | சட்ட மேலாளர் |
| வட்டம் | : | சென்னை | தேசியம் | : | இந்தியன் |

**<u>மனுதாரரின் குறுக்கு விசாரணை</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து தேதியில் TN 24 AY 3597 என்ற ஆம்புலன்ஸ் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இறந்த ஹரி பாலிசியை பொறுத்து மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் மோதி ஹரி இறந்ததால் எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் இறந்தவர் விபத்திற்கு காரணம் என்பதால் 2 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க முடியாது. முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இறுதி அறிக்கை இன்று வரை தாக்கல் செய்யப்படவில்லை. இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதி கொண்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் அதை பற்றி சரியாக தெரியவில்லை. ஆம்புலன்ஸ் ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து

ஏற்பட்டு ஹரி இறந்ததால் எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.